# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 07.06.2023**

| | |
|---|---|
| **Name : மாணிக்கம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சக்திநகரில் குடியிருந்து கெம்பிளாஸ்ட்டில் வேலை செய்து ஓய்வு பெற்று விட்டேன். எனது மனைவியின் பெயர் சுசீலா, எனது மகன் பெயர் பிரபு மற்றும் குணசீலன் ஆகும். எனது மகன்களுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். நாங்கள் மூன்றுபேரும் ஒரே குடியிருப்பில் பின்புறமாக குடியிருந்துவருகிறேன்.

2) கடந்த 31.07.2020–ம் தேதி இரவு 09.30 மணிக்கு நானும், எனது மனைவியும் சாப்பிட்டுவிட்டு தூங்குவதற்காக வீட்டின் கதவை பூட்டிவிட்டு மாடி வீட்டிற்கு சென்று தூங்கினோம் மறுநாள் காலை 01.08.2020–ம் தேதி காலை 5 மணிக்க எழுந்து வந்து பார்க்கும்போது, எனது வீட்டின் கதவு திறந்துகிடந்தது. யாரோ உடைத்திருந்தார்கள். வீட்டில் உள்ள பீரோ உடைக்கப்பட்டிருந்தது. 3 பவுன் ரெட்டைவடை செயின் ஒன்று. 3 பவுன் செயின் ஒன்று. ஒன்றரை பவுன் பதக்கம் ஒன்று. KM Susila என்ற எழுத்துள்ள மோதிரம் முககால் பவுன். தங்க வளையல் ஒரு ஜோடி 3 பவுன். பவளக்கல் மோதிரம் அரை பவுன் . ராசிக்கல் மோதிரம் அரைபவுன்.. மொத்தம் 12 1/4 பவுன் காணாமல் போய்விட்டது.

3) இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள்

எனக்கு தெரியும். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான. புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். எனது நகைகள் ஒரு மாதம் கழித்து கிடைத்துவிட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர். ஆனால் அவை அனைத்தும் உருக்கிய நிலையில் இருந்தது. உருக்கிய நிலையில் உள்ள நகைகளை நான் நீதிமன்றதத்தில் மனுதாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள உருக்கிய நிலையில் உள்ள நகைகள் தான் என சாட்சி அடையாளம் காட்டினார். உருக்கிய நிலையில் உள்ள நகைகள் **சா.பொ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

4) நான் கெம்பிளாஸ்ட்டில் டிரைவராக பணிபுரிந்தேன். நான் சக்திநகரில் தான் 30 வருடத்திற்குமேல் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். நான் கதவை பூட்டிதான் சென்றேனா என்றால் பூட்டித்தான் சென்றேன். மறுநாள் காலைதான் திருட்டுபோனது தெரியும்.. நான் போன் செய்தஉடன் சம்பவயிடத்திற்கு போலிசார் வந்தனர். வீட்டிலேயே என்னிடம் புகார் எழுதி வாங்கிச்சென்றனர். அந்த புகார் தான் என்னிடம் காட்டப்பட்டது என்றால் சரிதான்.

5) ஒரு மாதம் கழித்து போலிசார் சொல்லிதான் எதிரிகள் நகைதிருடியது குறித்து தெரியும். இந்த வழககு சம்மந்தமாக போலிசார் என்னை வீடடில் விசாரித்ததோடு சரி வேறு எங்கும் விசாரிக்கவில்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/— தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 07.06.2023**

| | |
|---|---|
| **Name : சுசீலா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சக்திநகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எனது மகன் பெயர் பிரபு மற்றும் குணசீலன் ஆகும். எனது மகன்களுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். நாஙகள் மூன்றுபேரும் ஒரே குடியிருப்பில் பின்புறமாக குடியிருந்துவருகிறேன்.

2) கடந்த 31.07.2020–ம் தேதி இரவு 09.30 மணிக்கு நானும், எனது கணவரும் சாப்பிட்டுவிட்டு தூங்குவதற்காக வீட்டின் கதவை பூட்டிவிட்டு மாடி வீட்டிற்கு சென்று தூங்கினோம் மறுநாள் காலை 01.08.2020–ம் தேதி காலை 5 மணிக்கு எழுந்து வந்து பார்க்கும்போது, எனது வீட்டின் கதவு திறந்துகிடந்தது. யாரோ உடைத்திருந்தார்கள். வீட்டில் உள்ள பீரோ உடைக்கப்பட்டிருந்தது. 3 பவுன் ரெட்டைவடை செயின் ஒன்று. 3 பவுன் செயின் ஒன்று. ஒன்றரை பவுன் பதக்கம் ஒன்று. KM Susila என்ற எழுத்துள்ள மோதிரம் முககால் பவுன். தங்க வளையல் ஒரு ஜோடி 3 பவுன். பவளக்கல் மோதிரம் அரை பவுன் . ராசிக்கல் மோதிரம் அரைபவுன்.. மொத்தம் 12 1/4 பவுன் காணாமல் போய்விட்டது.

3) இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார்மனு கொடுத்தார். எனது நகைகள் ஒரு மாதம் கழித்து கிடைத்துவிட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர். ஆனால் அவை அனைத்தும் உருக்கிய நிலையில்

இருந்தது. உருக்கிய நிலையில் உள்ள நகைகளை நான் நீதிமன்றதத்தில் மனுதாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் அ.சா.1 பெற்றுக்கொண்டார்.. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) போலிசார் என்னை சம்பவம் நடந்தவுடடன காலையில் வீட்டிற்கு வந்து விசாரித்தன். இந்த வழகது சம்மந்தமாக போலிசார் என்னை வீடடில் விசாரித்ததோடு சரி வேறு எங்கும் விசாரிக்கவில்லை. எங்கள் வீட்டில் காணமல் போன நகையை கட்டியாகத்தான் காட்டினர். அதனால் நாங்கள் அடையாளம் சொல்லமுடியாது என்று சொல்லிவிட்டோம். வழகது சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 07.06.2023**

| | |
|---|---|
| **Name : பிரபு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சக்திநகரில் குடியிருந்து டிரான்ஸ்போட்டில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தகப்பனார். எனது தம்பி பெயர் குணசீலன் ஆகும். நாங்கள் மூன்றுபேரும் ஒரே குடியிருப்பில் தனித்தனியாக வாழ்ந்துவருகீறோம். அ.சா.1 மற்றும் அ.சா.2 பின்புறமாக குடியிருந்துவருகிறேன்.

2) கடந்த 31.07.2020–ம் தேதி இரவு 09.30 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 சாப்பிட்டுவிட்டு தூங்குவதற்காக தம்பிவீட்டின் மேலே வீட்டின் கதவை பூட்டிவிட்டு மாடி வீட்டிற்கு சென்று தூங்கினார்கள். மறுநாள் காலை 01.08.2020–ம் தேதி காலை 5 மணிக்கு எழுந்து வந்து பார்க்கும்போது, வீட்டின் கதவு திறந்துகிடந்தது என்று எனக்கும் எனது தம்பிக்கும் தகவல் கொடுத்தார்கள். யாரோ உடைத்திருந்தார்கள். வீட்டில் உள்ள பீரோ உடைக்கப்பட்டிருந்தது. 3 பவுன் ரெட்டைவடை செயின் ஒன்று. 3 பவுன் செயின் ஒன்று. ஒன்றரை பவுன் பதக்கம் ஒன்று. KM Susila என்ற எழுத்துள்ள மோதிரம் முககால் பவுன். தங்க வளையல் ஒரு ஜோடி 3 பவுன். பவளக்கல் மோதிரம் அரை பவுன் . ராசிக்கல் மோதிரம் அரைபவுன்.. மொத்தம் 12 1/4 பவுன் காணாமல் போய்விட்டது.

3) இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார்மனு கொடுத்தார்.

நகைகள் ஒரு மாதம் கழித்து கிடைத்துவிட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர். ஆனால் அவை அனைத்தும் உருக்கிய நிலையில் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

4) எனது தகப்பனார் எனக்கு போன் மூலமாக அழைக்கும் போது நான் பக்கத்தில் வீட்டில் இருந்தேன். எனது அப்பா தகவல் சொல்லிதான் சம்பவம் குறித்து தெரியயும். போலிசார் என்னை சம்பவம் நடந்தவுடன் காலையில் வீட்டிற்கு வந்து விசாரித்தனர். இந்த வழகது சம்மந்தமாக போலிசார் பிறகு காவல் நிலையத்திலும் இரண்டு மூன்று முறை விசாரித்தார்கள். போலிசார் விசாரித்து தகவல் சொல்கிறோம் என்றனர். எங்கள் வீட்டில் காணமல் போன நகையை கட்டியாகத்தான் காட்டினர். நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் நாங்கள் அடையாளம் சொல்லமுடியாது என்று சொல்லிவிட்டோம். வழகது சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/— தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 07.06.2023**

| | |
|---|---|
| **Name : குணசீலன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சக்திநகரில் குடியிருந்து ஒப்பந்த வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தகப்பனார். எனது அண்ணன் பெயர் பிரபு ஆகும். நாஙகள் மூன்றுபேரும் ஒரே குடியிருப்பில் தனித்தனியாக வாழ்ந்துவருகீறோம். அ.சா.1 மற்றும் அ.சா.2 பின்புறமாக குடியிருந்துவருகிறேன்.

2) கடந்த 31.07.2020-ம் தேதி இரவு 09.30 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 சாப்பிட்டுவிட்டு தூங்குவதற்காக எனது மேலே வீட்டின் கதவை பூட்டிவிட்டு மாடி வீட்டிற்கு சென்று தூங்கினார்கள். மறுநாள் காலை 01.08.2020-ம் தேதி காலை 5 மணிக்கு எழுந்து வந்து பார்க்கும்போது, வீட்டின் கதவு திறந்துகிடந்தது என்று எனக்கும் எனது தம்பிக்கும் தகவல் கொடுத்தார்கள். யாரோ உடைத்திருந்தார்கள். வீட்டில் உள்ள பீரோ உடைக்கப்பட்டிருந்தது. 3 பவுன் ரெட்டைவடை செயின் ஒன்று. 3 பவுன் செயின் ஒன்று. ஒன்றரை பவுன் பதக்கம் ஒன்று. KM Susila என்ற எழுத்துள்ள மோதிரம் முககால் பவுன். தங்க வளையல் ஒரு ஜோடி 3 பவுன். பவளக்கல் மோதிரம் அரை பவுன் . ராசிக்கல் மோதிரம் அரைபவுன்.. மொத்தம் 12 1/4 பவுன் காணாமல் போய்விட்டது.

3) இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார்மனு கொடுத்தார். நகைகள் ஒரு மாதம் கழித்து கிடைத்துவிட்டதாக காவல் துறையினர்

தெரிவித்தனர். ஆனால் அவை அனைத்தும் உருக்கிய நிலையில் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) எனது தகப்பனார் எனக்கு போன் மூலமாக அழைக்கும் போது நான் பக்கத்தில் வீட்டில் இருந்தேன். எனது வீடும் எனது அப்பா வீடும் ஒட்டினார்போல் உள்ளது. எனது வீட்டின் மேலே தான் எனது பெற்றோர் படுத்திருந்தனார். எனது அப்பா தகவல் சொல்லிதான் சம்பவம் குறித்து தெரியயும். எங்கள் வீட்டில் காணமல் போன நகையை கட்டியாகத்தான் காட்டினர். நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் நாங்கள் அடையாளம் சொல்லமுடியாது என்று சொல்லிவிட்டோம். வழகககு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.